# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 135 /பேரூ/2025**
**நாள் : 15.05.2025**

திரு. இரா. பெரியசாமி,
அருப்பாவூர்,
பெரம்பலூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

1. திருமதி. N. லதா
   முன்னாள் செயல் அலுவலர்,
   திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சி,
   செங்கல்பட்டு மாவட்டம்.
2. திருமதி. ந. லதா
   செயல் அலுவலர்,
   திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை
   பேரூராட்சி, செங்கல்பட்டு மாவட்டம்.
3. திரு. K.K. அப்துல் கரீம்,
   ஆய்வு அலுவலர் (Cell Officer).
   பேரூராட்சிகளின் ஆணையரகம்,
   சென்னை. – எதிர் மனுதாரர்கள்

பெரம்பலூர் மாவட்டம், அரும்பாவூர், என்ற இடத்தை சேர்ந்த மனுதாரர் திரு. இரா. பெரியசாமி என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுத்த W.P. No. 7042 of 2025 வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 07.03.2025 நாளிட்ட தீர்ப்புரையில் வழங்கிய ஆணையை நிறைவேற்றும் பொருட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெரம்பலூர் மாவட்டம், அரும்பாவூர், பண்ணையார் தெரு (வடக்கு) கதவு எண்.13/1 என்ற முகவரியை சேர்ந்த திரு. இரா. பெரியசாமி என்பவர் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த

தனது 12.04.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் திருக்கழுக்குன்றம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலராக பணிபுரிந்த திருமதி. N. லதா என்பவர் 08.03.2019 முதல் 14.07.2021 வரை மற்றும் 20.07.2021 முதல் 15.08.2021 வரையிலான காலத்தில் பேரூராட்சியில் கீழ்க்காணும் 18 இனங்களில் மேற்கொண்ட மொத்தம் செலவினமான ரூ.2.64 கோடி தொகையினை போலியான பட்டியல்கள் மூலம் அரசு நிதி கையாடல் செய்திருப்பதாக புகார் தெரிவித்திருந்தார்.

| வ.எண். | விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 01. | பொது சுகாதாரம் தலைப்பில் செலவினம் | 21,49,263.00 |
| 02. | தனியார் டிராக்டர் மூலம் குப்பைகள் அகற்றுதல் | 3,91,559.00 |
| 03. | டீசல் கொள்முதல் | 23,46,048.00 |
| 04. | JCB மூலம் செலவினம் | 16,42,039.00 |
| 05. | மகளிர் குழு மூலம் செலவினம் | 26,69,995.00 |
| 06. | மரக்கன்றுகள் கொள்முதல் | 1,75,705.00 |
| 07. | வாகனம் பராமரிப்பு செலவினம் | 1,58,338.00 |
| 08. | நிதி மாற்றம் | 50,00,000.00 |
| 09. | விளம்பரம் குறித்த செலவினம் | 1,40,140.00 |
| 10. | விளம்பரம் வாசகங்கள் எழுதுதல் | 3,43,809.00 |
| 11. | சில்லரை செலவினம் | 16,24,362.00 |
| 12. | கொரோனா செலவினம் | 15,11,589.00 |
| 13. | மின் உதிரிப் பொருட்கள் கொள்முதல் | 12,90,146.00 |
| 14. | குடிநீர் பொருட்கள் கொள்முதல் | 62,42,742.00 |
| 15. | குடிநீர் வினியோகம் செய்ததாக செலவினம் | 1,53,831.00 |
| 16. | கணினி பராமரிப்பு செலவினம் | 1,82,205.00 |
| 17. | விளம்பரம் செலவினம் | 2,22,070.00 |
| 18. | ஜெராக்ஸ் செலவினம் | 1,69,577.00 |
| | மொத்தம் | 2,64,13,418.00 |

2. மேற்காணும் மனுதாரரின் புகார் மனு குறித்து திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 04.11.2024 நாளிட்ட அறிக்கையில் முன்னாள் பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி. N. லதா என்பவர் மீது புகார்தாரர் திரு. ஆர். பெரியசாமி அளித்த புகார் தொடர்பாக சென்னை, பேரூராட்சிகளின் இயக்கக ஆய்வு அலுவலர், திருக்கழுக்குன்றம் தேர்வு நிலை பேரூராட்சியில் 21, 22 மற்றும் 23.10.2024 ஆகிய நாட்களில் மேற்படி முன்னாள் செயல் அலுவலர் பணிபுரிந்த காலத்தில் செலவிடப்பட்ட செலவின பட்டியல் மற்றும் பதிவேடுகள் பார்வையிடப்பட்டு உரிய ஆய்வுகள் மேற்கொள்ள பதிவேடுகள், செலவினப் பட்டியல் சென்னை, பேரூராட்சிகளின் இயக்ககத்தில் 25.10.2024 அன்று ஆய்வு அலுவலர் (Cell Officer) அவர்களிடம் நேரில் ஒப்படைக்கப்பட்டது என தெரிவித்திருந்தார்.

3. இம்முறைமன்ற நடுவம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையை ஆய்வு செய்து, திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்த திருமதி. N. லதா என்பவரால் 08.03.2019 முதல் 14.07.2021 மற்றும் 20.07.2021 முதல் 15.08.2021 வரையிலான காலத்தில் மொத்தம் ரூ.2.64 கோடி முறைகேடாக செலவினம்

மேற்கொள்ளப்பட்டுள்ளது என்கிற புகார் குறித்து பேரூராட்சிகளின் ஆணையரக அலுவலரால் உரிய ஆவணங்களுடன் ஆய்வு செய்து வந்த நிலையில், மேற்படி புகார் குறித்து விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்கக ஆய்வு அலுவலருக்கும், (Cell Officer) இதனை நடைமுறைப்படுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கும் அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணை எண்.17/பேரூ./2024 நாள் 25.02.2025ல் ஆணை வெளியிடப்பட்டது.

4. இதற்கிடையில் பெரம்பலூர் மாவட்டம், அரும்பாவூர் இடத்தைச் சார்ந்த திரு. இரா. பெரியசாமி என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில் (W.P. No. 7042 of 2025) மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட 07.03.2025 நாளிட்ட ஆணையில் மனுதாரர் திரு. இரா. பெரியசாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த 12.04.2024 நாளிட்ட புகார் மனு குறித்து, மனுதாரர் திரு. பெரியசாமி மற்றும் எதிர்மனுதாரரான அப்போதைய திருக்கழுக்குன்றம் பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி. லதா ஆகியோரை நேரடி விசாரணை மேற்கொண்டு, உரிய சட்ட விதிகளின் கீழ் 8 வார காலத்திற்குள் ஆணையினை இம்முறைமன்ற நடுவத்தால் பிறப்பிக்குமாறு அறிவுறுத்தி ஆணையிடப்பட்டுள்ளது.

5. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் W.P.No.7042 of 2025 வழக்கில் வழங்கிய 07.03.2025 நாளிட்ட ஆணையை நிறைவேற்றும் வகையில் மனுதாரர் திரு. இரா. பெரியசாமி எதிர்மனுதாரர்களான திருமதி N. லதா, முன்னாள் செயல் அலுவலர், திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சி, திரு. K.K. அப்துல் கரீம், ஆய்வு அலுவலர் (Cell Officer), பேரூராட்சிகளின் ஆணையரகம் மற்றும் திருமதி. ந. லதா, செயல் அலுவலர், திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சி ஆகியோர் 09.05.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணைக்கு ஆஜராகுமாறு 29.04.2025 மற்றும் 30.04.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. மனுதாரர் திரு. இரா. பெரியசாமி என்பவர் 09.05.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

நான் உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றத்தில் சமர்ப்பித்த 12.4.2024 நாளிட்ட புகார் மனுவில் திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்த திருமதி. N. லதா என்பவரால் 08.03.2019 முதல் 14.07.2021 மற்றும் 20.07.2021 முதல் 15.08.2021 வரையிலான காலத்தில் மொத்தம் ரூபாய் 2.64 கோடி முறைகேடாக செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்கிற புகார் இம்முறை மன்றம் ஆய்வு செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணை எண்.17/பேரூ./2024 நாள் 25.02.2025ல் வெளியிடப்பட்ட ஆணையில், பேரூராட்சிகளின் இயக்கக ஆய்வு அலுவலருக்கும், இதனை நடைமுறைப்படுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கும் அறிவுறுத்தி வெளியிடப்பட்ட ஆணையினை நான் ஏற்று கொள்கிறேன். மேலும், திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்த திருமதி. N. லதா என்பவர் மீது தெரிவித்த புகாரினை குறித்து பேரூராட்சிகளின் ஆணையரக ஆய்வு அலுவலரால் 6.1.2025 அன்று அவரது அறிக்கை பேரூராட்சிகளின் ஆணையருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக ஆய்வு அலுவலரால் இன்று ( 09.05.2024) தெரிவிக்கப்பட்ட நிலையில், இப்புகார் குறித்து எவ்வித காலதாமதமின்றி துரித

நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்காணும் ஆணை எண்.17/பேரூ./2024 நாள் 25.02.2025யை தபால் மூலம் ஏற்கனவே பெற்றுவிட்டேன் இருப்பினும் அதன் நகலினையும் இன்று பெற்றுக் கொண்டேன்" என தெரிவித்துள்ளார்.

7. எதிர்மனுதாரரான பேரூராட்சிகளின் ஆணையரக ஆய்வு அலுவலர் திரு. K.K. அப்துல் கரீம் என்பவர் 09.05.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்.

''பெரம்பலூர் மாவட்டம், அரும்பாவூர், 13/1, பண்ணையார் தெரு (வடக்கு) என்ற முகவரியில் வசிக்கும் இரா. பெரியசாமி, வயது (70) த/பெ. ச. இராமசாமி என்பவரால் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றத்தில் சமர்ப்பித்த 12.4.2024 நாளிட்ட புகார் மனுவில், திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்த திருமதி. N. லதா என்பவரால் 08.03.2019 முதல் 14.07.2021 மற்றும் 20.07.2021 முதல் 15.08.2021 வரையிலான காலத்தில் மொத்தம் ரூபாய் 2.64 கோடி முறைகேடாக செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற புகார் குறித்து விசாரணை மேற்கொள்ள ஆய்வு அலுவலராக பேரூராட்சி ஆணையரால் நியமனம் செய்யப்பட்டேன். மேற்காணும் புகார் குறித்து, ஆய்வு மேற்கொண்டு தொடர்புடைய ஆய்வு அறிக்கையினை 6.1.2025 அன்று பேரூராட்சிகளின் ஆணையரிடம் உரிய மேல் நடவடிக்கையின் பொருட்டு சமர்ப்பித்துவிட்டேன் என்ற விவரத்தினை இம்முறை மன்றத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்''. மேலும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தால் வெளியிடப்பட்ட ஆணை எண்.17/பேரூ./2024 நாள் 25.02.2025ன் நகலினை பெற்றுக்கொண்டேன் என தெரிவித்துள்ளார்.

8. எதிர்மனுதாரரான திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி. ந. லதா என்பவர் 09.05.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்.

"பெரம்பலூர் மாவட்டம், அரும்பாவூர், 13/1, பண்ணையார் தெரு (வடக்கு) என்ற முகவரியில் வசிக்கும் இரா. பெரியசாமி, வயது (70) த/பெ. ச. இராமசாமி என்பவரால் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றத்தில் சமர்ப்பித்த 12.4.2024 நாளிட்ட புகார் மனுவில், திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்த திருமதி. N. லதா என்பவரால் 08.03.2019 முதல் 14.07.2021 மற்றும் 20.07.2021 முதல் 15.08.2021 வரையிலான காலத்தில் மொத்தம் ரூபாய் 2.64 கோடி முறைகேடாக செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற புகார் தொடர்பாக, சென்னை, பேரூராட்சிகளின் இயக்கக ஆய்வு அலுவலர் திருக்கழுக்குன்றம் தேர்வு நிலை பேரூராட்சியில் 21, 22 மற்றும் 23.10.2024 ஆகிய நாட்களில் மேற்படி அலுவலர் பணிபுரிந்த காலத்தில் செலவிடப்பட்ட செலவின பட்டியல் மற்றும் பதிவேடுகள் பார்வையிடப்பட்டு உரிய ஆய்வுகள் மேற்கொள்ள பதிவேடுகள், செலவினப்பட்டியல் சென்னை, பேரூராட்சிகளின் இயக்ககத்தில் 25.10.2024 அன்று ஆய்வு அலுவலர் (Cell Officer) அவர்களிடம் நேரில் ஒப்படைக்கப்பட்டது. மேலும் ஆய்வு அலுவலர் அறிக்கையின் நகல் திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் கிடைக்கப் பெறவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் பணிவுடன் தெரிவித்து கொள்கிறேன்".

மேலும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தால் வெளியிடப்பட்ட ஆணை எண்.17/பேரூ./2024 நாள் 25.02.2025ன் நகலினை பெற்றுக்கொண்டேன் என தெரிவித்துள்ளார்.

9. எதிர்மனுதாரரான திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திருமதி N. லதா என்பவர் 09.05.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்.

"பெரம்பலூர் மாவட்டம், அரும்பாவூர், 13/1, பண்ணையார் தெரு (வடக்கு) என்ற முகவரியில் வசிக்கும் இரா. பெரியசாமி, வயது (70) த/பெ. ச. இராமசாமி என்பவரால் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றத்தில் சமர்ப்பித்த 12.4.2024 நாளிட்ட புகார் மனுவில், திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்த திருமதி. N. லதா என்பவரால் 08.03.2019 முதல் 14.07.2021 மற்றும் 20.07.2021 முதல் 15.08.2021 வரையிலான காலத்தில் மொத்தம் ரூபாய் 2.64 கோடி முறைகேடாக செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற புகார் தொடர்பாக, பேரூராட்சிகளின் ஆணையரால் 18.2.2025 நாளிட்ட விளக்கம் கோரும் குறிப்பாணை வழங்கப்பட்டு அதற்கான விளக்கத்தினையும் 13.5.2025 அன்று சமர்ப்பித்துள்ளேன். ஆய்வு அலுவலரின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளுக்கு தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 17பி–ன்கீழ் என் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளிக்க வேண்டியுள்ளது. இதனிடையில் நான் வயது முதிர்வின் காரணமாக 31.3.2025 அன்று காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் பணியிலிருந்து ஓய்வு பெற இருந்த நிலையில், 31.3.2025 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்காமல், தற்காலிக பணிநீக்கம் செய்தும் பணிநீட்டிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு உள்ளாட்சி முறை மன்றத்தால் வெளியிடப்பட்ட ஆணை எண்.17/பேரூ./2024 நாள் 25.02.2025யின் நகலினை பெற்றுக் கொண்டேன்" என தெரிவித்துள்ளார்.

10. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான திருக்கழுக்குன்றம் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம், பேரூராட்சிகளின் ஆணையரக ஆய்வு அலுவலரின் வாக்குமூலம் மற்றும் திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திருமதி. N. லதா என்பவரின் வாக்குமுலம் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் திரு. இரா. பெரியசாமி என்பவர் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த தனது 12.04.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் திருக்கழுக்குன்றம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலராக பணிபுரிந்த திருமதி. N. லதா என்பவர் 08.03.2019 முதல் 14.07.2021 வரை மற்றும் 20.07.2021 முதல் 15.08.2021 வரையிலான காலத்தில் பேரூராட்சியில் மொத்தம் ரூ.2,64 கோடி செலவினங்களை போலி பட்டியல்கள் மூலம் அரசு நிதியை கையாடல் செய்திருப்பதாக புகார் தெரிவித்திருந்தார். இது குறித்து திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சியின் செயல் அலுவலரிடம் அறிக்கை பெறப்பட்டதில் இதே புகார் தொடர்பாக பேரூராட்சிகளின் ஆணையரக ஆய்வு அலுவலரால் பேரூராட்சியில் 21.10.2024, 22.10.2024 மற்றும் 23.10.2024 ஆகிய நாட்களில் நேரடியாக ஆவணங்கள் பார்வையிடப்பட்டு, சம்பந்தப்பட்ட ஆவணங்களை பரிசீலிக்கும் பொருட்டு

அனைத்து ஆவணங்களும் ஆய்வு அலுவலரிடம் பேரூராட்சிகளின் ஆணையரகத்தில் 25.10.2024 அன்று சமர்ப்பிக்கப்பட்டது என செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்திருந்த நிலையில், மனுதாரரின் புகார் மனு குறித்து துரித நடவடிக்கை மேற்கொள்ள ஆய்வு அலுவலருக்கும் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநருக்கும் அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணை எண்.17/பேரூ./2024 நாள் 25.02.2025ல் ஆணை வெளியிடப்பட்டது. இவ்வாணையின் நகல் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் அனைவருக்கும் அனுப்பப்பட்டன.

இதற்கிடையில் மனுதாரர் திரு. இரா. பெரியசாமி என்பவர் இப்புகார் மனு குறித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, இவ்வழக்கில் W.P. No. 7042 of 2025 ) மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 07.03.2025 நாளிட்ட ஆணையில் மனுதாரர் திரு. இரா. பெரியசாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த 12.04.2024 நாளிட்ட புகார் மனு குறித்து, மனுதாரர் திரு. பெரியசாமி மற்றும் எதிர்மனுதாரரான அப்போதைய திருக்கழுக்குன்றம் பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி. லதா ஆகியோரை நேரடி விசாரணை மேற்கொண்டு, உரிய சட்ட விதிகளின் கீழ் 8 வார காலத்திற்குள் ஆணையினை இம்முறைமன்ற நடுவத்தால் பிறப்பிக்குமாறு அறிவுறுத்தி ஆணையிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.03.2025 நாளிட்ட ஆணையினை நிறைவேற்றும் பொருட்டு மனுதாரர் திரு. இரா. பெரியசாமி எதிர்மனுதாரர்களான 1. திருமதி N. லதா, முன்னாள் செயல் அலுவலர், திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சி, 2. திரு. K.K. அப்துல் கரீம், ஆய்வு அலுவலர் (Cell Officer), பேரூராட்சிகளின் ஆணையரகம் 3. திருமதி. ந. லதா, செயல் அலுவலர், திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சி ஆகியோர்களிடம் இம்முறைமன்ற நடுவத்தில் 09.05.2025 அன்று விசாரணை மேற்கொண்டு வாக்குமூலங்கள் பெறப்பட்டன.

மனுதாரர் திரு. இரா. பெரியசாமி என்பவர் இம்மறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த 12.04.2024 நாளிட்ட புகாரினை ஆய்வு செய்து இம்முறைமன்ற நடுவத்தால் ஏற்கனவே வெளியிடப்பட்ட 25.02.2024 நாளிட்ட ஆணையை (ஆணை எண்.17/பேரூ./2024) ஏற்றுக்கொள்வதாக தெரிவித்துள்ளதை அவரது வாக்குமூலத்தின் மூலம் அறிய வருகிறது.

இதற்கிடையில் மனுதாரர் திரு. இரா. பெரியசாமி என்பவர் சமர்ப்பித்த 12.04.2024 நாளிட்ட புகார் மனு குறித்து, பேரூராட்சிகளின் ஆணையரக ஆய்வு அலுவலர் (Cell Officer) பரிசீலித்து தனது அறிக்கையை 06.01.2025 அன்று பேரூராட்சிகளின் ஆணையரிடம் உரிய மேல் நடவடிக்கைக்காக சமர்ப்பித்துள்ளதை ஆய்வு அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

ஆய்வு அலுவலரின் அறிக்கை ஏதும் திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சியில் பெறப்படவில்லை என்பதையும் பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ள வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

இந்நிலையில், ஆய்வு அலுவலரின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளுக்கு, திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திருமதி. N. லதா என்பவர் மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 17-பிஇன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு, வயது முதிர்வின் காரணமாக 31.03.2025 அன்று

காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் பணியிலிருந்து ஓய்வு பெறவிருந்த நிலையில், 31.03.2025 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்காமல் தற்காலிக பணி நீக்கம் செய்தும் மற்றும் பணி நீட்டிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளதை முன்னாள் பேரூராட்சி செயல் அலுவலரான திருமதி. N. லதா என்பவரின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்களின் வாயிலாக தெரிய வருகிறது.

மேற்காணும் சூழ்நிலையில் மனுதாரர் திரு. இரா. பெரியசாமி என்பவர் சமர்ப்பித்த 12.04.2024 நாளிட்ட மனுவில் தெரிவித்துள்ள புகார் குறித்து உரிய தொடர் நடவடிக்கையினை துரிதமாக மேற்கொண்டு, தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 17-பி கீழ் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையை விதிகளுக்குட்பட்டு உரிய உத்திரவினை பிறப்பிக்குமாறு பேரூராட்சிகளின் ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு மே திங்கள் 15 ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. இரா. பெரியசாமி,
தமிழ்நாடு பேரூராட்சி ஓய்வு பெற்ற அலுவலர்கள் நலன் சங்கம்,
13/1, பண்ணையார் தெரு (வடக்கு),
அரும்பாவூர் - 621103, பெரம்பலூர் மாவட்டம்.

2) திருமதி. N. லதா,
முன்னாள் செயல் அலுவலர்,
திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சி,
செங்கல்பட்டு மாவட்டம்.
பின்னர்,
காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின்
உதவி இயக்குநர், (தற்காலிக பணி நீக்கம்),
காஞ்சிபுரம் மாவட்டம்.

3) திரு. K.K. அப்துல் கரீம்,
ஆய்வு அலுவலர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை –600 028

4) செயல் அலுவலர்,
திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சி,
செங்கல்பட்டு மாவட்டம்.

5) பேரூராட்சிகளின் ஆணையர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை –600 028

6) இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer)
(பெயரிடப்பட்ட உறையில்)
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை – 600 028

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

19/5/25
செயலாளர்
19/5/25